(*c*) if not, why?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Police Officers in the mufassal are eligible for house rent allowance in lieu of rent free quarters at the following rates :—

Reserve Inspector of Police	Rs. 30 per mensem.
Sub-Inspector of Police, Reserve Sub-Inspector of Police	Rs. 25 per mensem.
Jamedars and Head Constables ..	Rs. 10 per mensem.
Police constables	Rs. 7 per mensem.

(*b*) & (*c*) Except the Sub-Inspectors, the other Police personnel in the Kanyakumari district, who were allotted from the former Travancore-Cochin State are not paid house rent allowance. The question of grant of house rent allowance to these personnel is pending final orders regarding fixation of their pay in the Madras scales of pay.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முன்பு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து, இப்பொழுது கன்னியா குமரி மாவட்டத்தில் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நம் முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய அதே சம்பள விகிதம் கொடுக்கப்படுகிறதா? அல்லது அவர்கள் அந்த ராஜ்யத்தில் அனுபவித்து வந்த அந்தச் சம்பள விகிதம் தரப்படுகிறதா? திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் அவர்கள் முன்னால் வாங்கி வந்தார்களே, அதே சம்பள விகிதத்தை இந்த ராஜ்யத்தில் அவர் கள் கேட்டுப் பெறுவதற்கு உரிமை உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத் தில் வேலை செய்து வந்தவர்களில் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப் பட்டிருப்பவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் முன்பு அங்கு என்ன பதவி வகித்தார்களோ, அந்தப் பதவிக்குச் சமமாக இந்த மாநிலத்தில் என்ன பதவி இருக்கிறது என்பதைப் பார்த்து, அதன்படி நிர்ணயிக்கப்பட்டுவருகிறது. அப்படி பதவி நிர்ண யிக்கப்பட்ட பிறகு, இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கு எந்த விகிதப்படி சம்பளம் அளிக்கப்படுகிறதோ, அந்த விகிதமே இவர் களுக்கும் அளிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வேறு மாநிலத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு 'ட்ரான்ஸ்பர்' செய்யப்பட்டு வந்திருப்பவர்கள், அங்கு செய்த பணியையே இந்த ராஜ்யத்திலும் செய்யும்போது, அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாநில சர்வீஸில் இருக் கிறவர்களுக்கு என்ன என்ன வீட்டு வாடகை அலவன்ஸ் உண்டோ அதுவே மாற்றல் செய்யப்பட்டவர்களுக்கும் அளிக்கப்படும்.

Madras State (change of name in Tamil)

* 713 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have issued any executive orders for the use of the word "Tamilnad" in Tamil only or in English or in both; and

27th July 1962]

(b) if so, whether a copy thereof will be placed on the Table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) It was announced on the floor of this House on the 24th February 1961 that the Government had decided that Madras State should, in future, be referred to in Tamil by the name "Tamizh Nadu". Orders have been issued accordingly for the use of the name in Tamil only.

(b) A copy of the order * is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : " தமிழில் மட்டும் ' தமிழ்நாடு ' என்று அழைக்கப்படும்", என்ற உத்தரவு இடைக்கால உத்தரவா? அரசியல் அமைப்புச் சட்டத்தில், "சென்னை ராஜ்யம்" என்பதற்குப் பதிலாகத் " தமிழ்நாடு" என்று திருத்தியமைக்கும் யோசனை எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் யோசனை இல்லை. "Madras" என்பது தமிழில் "சென்னை" என்று சொல்லப்படும். "Madras State" என்பதை "சென்னை ராஜ்யம்" என்று தமிழில் சொல்லி வந்தோம். இப்பொழுது தமிழில் அப்படிச் சொல்வதில்லை. ' தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வது ' என்ற முடிவு செய்யப்பட்டு அதை நாம் இப்பொழுது நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். தமிழ் ஆட்சிமொழியாகக் கொள்ளப்பட்ட பிறகு, என்ன பெயரிடுவது என்று யோசிக்கப்பட்டது. "சென்னை ராஜ்யம்" என்ற பெயரை இனியும் வைத்துக் கொள்வது சரியல்ல என்ற அடிப்படையில், சென்னை நகரத்திற்கு மாத்திரம் ' சென்னை ' என்ற பெயரையும், சென்னை ராஜ்யத்திற்குத் ' தமிழ் நாடு ' என்ற பெயரையும் வைத்துக்கொள்வது என்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்துவதாக உத்தேசம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு ராஜ்யத்திற்குத் தமிழில் ஒரு பெயரும் ஆங்கிலத்தில் இன்னொரு பெயரும் என்று இருப்பது சரியா? (குறுக்கீடு) ' இந்தியா ' என்பதை ' பாரதம் ' என்றும் சொல்லலாம். இரண்டு பெயர்களையும் நாம் நம் தேசத்தைப் பொறுத்தவரையிலும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதுபோல், அரசியல் அமைப்புச் சட்டத்திலே "Madras State that is Tamilnad" என்று மாற்ற உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது இன்றைக்குப் புதிதாக முடிவு செய்ததல்ல. சென்னை நகரத்திற்கு மாத்திரம் "சென்னை" என்ற பெயரை வைத்துக்கொண்டு, "சென்னை ராஜ்யம்" என்று சொல்லிவந்ததற்குப் பதிலாக "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இது சரியா, இல்லையா என்பது இந்த மன்றம் முடிவு செய்ய வேண்டியது, மக்கள் முடிவு செய்ய வேண்டியது. ஆகவே, அரசியலமைப்புச் சட்டத்தை இதற்காக திருத்த வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முன்பு இருந்த

---

* Printed as Appendix I on pag 593.

மன்றத்தில் நான் ஒன்று சொன்னேன். அதையே இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். Madras என்று சொன்னால் வெளி நாட்டில் அதற்கு நல்ல பெயர் இருக்கிறது. Goodwill இருக்கிறது. Madras என்ற பெயரை மாற்றுவது நல்லதல்ல. அது இந்த மாநிலத்தின் நன்மைக்கு உகந்தது அல்ல என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: கான்ஸ்டிட்யூஷனை மாற்றாமலேயே "தமிழ்நாடு" என்ற பெயரை நாமாகவே வைத்துக்கொள்வதைச் சட்டம் அனுமதிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டம் ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை.

Public Administration (System of Inspection)

* 714 *Q.*—Sri C. CHIRANJEEVALU NAIDU (on behalf of Sri V. SANKARAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a party of Officers have been deputed by the Central Government to study the system of inspection in public administration in the State; and

(*b*) if so, the nature and scope of their work?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

அரசியல் கைதிகள்

* 715 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள அரசியல் கைதிகள் ஏதாவது நிபந்தனைகளின்மீது விடுதலை செய்யப்பட்டனரா?

(இ) எந்த அடிப்படையில்?

(உ) அதற்கான காரணமென்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) There were no political prisoners in our State. The Member apparently refers to certain life-term prisoners, who were recently released by Government.

(*b*) & (*c*) These prisoners were released taking into consideration the long period of imprisonment undergone by them and the remission earned by them.

Elementary school (upgrading)

* 716 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the panchayat union Councils are not consulted by the educational authorities at the time of upgrading of the elementary schools into higher elementary schools; and